இலக்குவனாரின் எண்ணங்கள்...!

தி. வ. மெய்கண்டார்

14—10—73 அன்று காலை 10 மணி அளவில், சென்னை திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப்பள்ளியில், மறைந்த பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் அவர்களுக்கு, எழுத்தாளர் சங்கத் தலைவர் கோ. பன்னீர்ச்செல்வம், பி.எஸ்ஸி., பி.எல்., அவர்கள் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சங்கப் பொதுச் செயலாளர் கவிஞர் வா. மு. சேதுராமன், திரு. இராசகோபாலன், பி.ஏ., பி.டி. கவிஞர் குருவிக் கரம்பை சண்முகம், பேராசிரியர் இரா. சேது, பேராசிரியர் எழில்முதல்வன் திரு. மா. செங்குட்டுவன் கவிஞர் முத்துக்கூத்தன் ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர். இறுதியாகப் பேசிய திரு. தி. வ. மெய்கண்டார் ஆற்றியஉரை இங்கு அப்படியே வெளியிடப்படுகிறது.

பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய எழுத்தாளர் சங்கத் தலைவர் அவர்களே! பொதுச்செயலாளர் கவிஞர் வா.மு. சேதுராமன் அவர்களே! பேராசிரியர் இரா. சேது அவர்களே! பேராசிரியர் எழில் முதல்வன் அவர்களே! கவிஞர் குருவிக் கரம்பை சண்முகம் அவர்களே! அருமை நண்பர்களே! பெரியோர்களே!

இன்றைத் தினம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மறைந்த பேராசிரியர் இலக்குவனார் அவர்களுடைய இரங்கற் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டமைக்காகப் பெரிதும் மனத்துயர் அடைகிறேன்.

பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்னதாக சென்னைக்கு வந்திருந்தார். வந்தவர் நம்மையெல்லாம் சந்தித்து—இறுதியாக விடைபெற்றுச் செல்பவரைப் போல—பேசிச் சென்றார்.

அவர் இன்றையத் தினம் நம்மிடையே இல்லை என்பதை எண்ணுகிற போது பெரிதும் மனத்துயரம் கொள்ள வேண்டி இருக்கிறது.

இருபெரும் இயக்கங்கள்

நண்பர்களே! தமிழ் நாட்டினுடைய வரலாற்றை எண்ணிப் பார்ப்போமேயானால் கடந்த ஐம்பது, அறுபதாண்டுக் காலத்தில் இரண்டு இயக்கங்கள் தீவிரமாக நாட்டு மக்களிடையே பணியாற்றியதை அறியலாம்

ஒன்று, நாட்டு விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு போரிட்ட காங்கிரசு இயக்கம்; இன்றொன்று, தமிழர்-தென்னவர்-உரிமைகளைக் காப்பதற்கென்றே தோன்றிய—ஜஸ்டிஸ்கட்சி என்று பின்னாளில் அழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம், அதற்குப் பிறகு வந்த சுயமரியாதை இயக்கம், அதனை ஒட்டிய திராவிடர் கழகம் அதனுடைய வளர்ச்சியான திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய—திராவிடர் இயக்கமாகும். இவ்விரண்டு இயக்கமும் ஒன்றை ஒன்று நம்பாத காரணத்தால், ஒன்றை ஒன்று தீவிரமாக மறுத்து எதிர்த்து வந்தன. அதுவே இன்று வரை தமிழகத்தின் அரசியலாக இருப்பதை அனைவரும் அறியலாம்.

பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் நான் இரண்டாவதாகக் குறிப்பிட்ட இயக்கமாகிய திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்தவராவார்கள். ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைக்கழகம் திராவிடர் கழகம், தி.மு.கழகம் ஆகிய அமைப்புகளின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு அதற்காக மெய்மறந்து தீவிரமாக உழைத்தார்கள்.

தனித்தன்மை

அப்படி அவர்கள் கொள்கைகளை ஏற்றுக் கொண்டாலும் எந்த ஒரு இயக்கத்திலும் அவர் தன்னை உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளவில்லை. அதனை அவரே ஒரு இடத்தில் விளக்கியுள்ளார்.

பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் காங்கிரசு கட்சியின் தலைவர்களுள் ஒருவரான காமராசரைப் பற்றிய வாழ்க்கை நூல் ஒன்றை 1956 ஆம் ஆண்டிலேயே எழுதியுள்ளார். இதனை நான் இப்பொழுது குறிப்பிடுகிறபோது பலர் வியப்படைகிறார்கள். அது போன்றே அந்தக் காலத்திலும் பலர் வியப்படைந்தார்கள்.

எனவே, பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் தான் எழுதிய அந்த நூலின் முன்னுரையில் தன்னுடைய நிலையை விளக்கமாக எழுதி, தான் எந்தச் கட்சியையும் சார்ந்தவனில்லை என்றும் தனக்கெனச் சில கொள்கைகள் உண்டு என்று சுட்டிக் காட்டினார்.

பேராசிரியர் இலக்குவனார் எழுதுகிறார் :

''திருவாளர் காமராசர் காங்கிரசுக்கட்சியின் பெருந்தலைவர்களுள் ஒருவர்; வடநாட்டுத் தலைமைக்கு உறுதுணையாக நிற்பவர்; தமிழ்ப் பற்றோ தமிழர் பற்றோ அற்றவர், இலக்குவனார் திராவிட கழகத்தைச் சேர்ந்தவர்; இவரா காமராசரைப் பற்றி நூல் எழுதுகின்றனர் என்றெல்லாம் உரையாடல்கள் நிகழ்ந்தன.....'' யாம் திராவிடகழகத்தைச் சேர்ந்தவராவோம்; அதனால் அவர் வரலாறு எழுதுதல் கூடாது'' என்பதும் தவறு. பிறர் நினைப்பது போல் யாம் திராவிடகழகத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் அது குற்றமாகாது. திராவிட கழகத் தலைவர் பெரியார், காமராசர் அவர்களை ஆதரிப்பதனால் யாமும் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்ற கருத்தில் கூறவில்லை. தனித்தன்மை வேறு, கட்சித்தன்மை வேறு. என்றுமே கட்சிக்கண் கொண்டு பார்த்து மதித்தல் நன்றன்று.....'' கட்சிவெறி மதவெறி போல் ஆகிவிட்டது. மதவெறியால் மக்கள் போரிட்டு மாண்டது போல் கட்சி வெறியாலும் போரிட்டு மாள்கின்றனர். இவ்வவல நிலை நீங்க வேண்டும்''.

பேராசிரியர் சேது அவர்கள் பேசுகிற போது இலக்குவனார் மிகத் துணிச்சல் வாய்ந்தவர் என்றும், தமிழைத் தாக்கினால் பெரியார் அவர்களைக்கூட எதிர்ப்பேன் என்று ஒரு அமைச்சரிடமே குறிப்பிட்டதையும் எடுத்துக் காட்டித்தான் அவரோடு பெற்ற அனுபவத்தை விவரித்தார்.

இந்த உணர்வு அவருக்குத் திடீரென்று வந்து விடவில்லை இவ்வுணர்வு எல்லாக்காலத்திலிருந்தது இதைப் பற்றியும் இந்நூலின் முன்னுரையிலிருந்தே படித்துணரலாம்

"யாம் திராவிட கழக உறுப்பினராக என்றும் இருந்ததில்லை. ஆனால் திராவிடக் கழகத் தலைவர் பெரியார் அவர்களிடத்தில் பெருமதிப்புடையோம் சாதி ஒழிப்பு, இந்தியைக் கட்டாயமாக்காமை, திருக்குறள் பரப்புதல், வகுப்புரிமை போற்றல் முதலியவற்றில் யாமும் பங்கு கொண்டு பெரியார் வழி நின்று கடனாற்றுகிறோம் அதனால் எம்மையும் திராவிட கழகத்தினரெனக் கருதினர் பலர். சில செய்தி இதழ்கள் அவ்வாறே வெளியிட்டன. யாம் மறுப்பு வெளியிட எழுதியும் அவை வெளியிடாமல் எம்மைத் 'திராவிடக் கழகப் பிரமுகர்' என்றே வெளியிட்டு வந்தன ஆனால் யாம் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவரல்லோம் எமக்கெனத் தனிக்கொள்கைகள் உண்டு''.

என்ன அந்தக் கொள்கைகள்! அதையும் இப்முன்னுரையிலேயே விவரிக்கிறார்.

இலக்குவனாரின் கொள்கை

''தமிழ் எமது உயிர்; தமிழன் உயர்வே தமிழ் நாட்டின் உயர்வு. தமிழ் நாட்டில் தமிழுக்குத் தான் முதன்மை உண்டு. தமிழ் நாடு ஏனைய நாடுகள் போல் உரிமையாட்சி பெற்றுத் தமிழர்களால் ஆளப்படவேண்டும். குலமும் குடியும் ஒன்றே; வழிபடு கடவுளும் ஒன்றே; யாதும் ஊரே யாவரும் கேளிர் குறள். நெறியோங்கினால் குடியரசோங்கும்'' என்ற கொள்கைகளே எம்வாழ்வை இயக்குவன. யாம் ஒரு புலவர்; எழுத்தாளர். ஆகவே யாம் யாவர்க்கும் பொதுவான நிலையில் உள்ளோம். கட்சி காரணமாக விருப்போ, வெறுப்போ கொள்ள வேண்டிய நிலையில் இல்லோம். **ஆனால் தமிழ்ப் பகைவர் எமது பகைவராவர்; தமிழ் நண்பர் எமது நண்பராவர்.**

பேராசிரியர் இலக்குவனாருக்கென்று ஒரு சில கொள்கைகள் இருந்தன. அதை எந்த எந்தக் கட்சிகள் ஏற்றுக் கொண்டனவோ. அந்த அந்தக் கட்சிகளுக்கு அவர் ஆதரவு தந்தார் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்!

ஆயினும், அவர் மறைவதற்கு முன்னால் ஒரு கட்சியிலே சேர்ந்தாரென்றும், பிறகு அந்தக் கட்சியிலே இருந்து விலகி இன்னொரு கட்சியிலே (தி. மு. க) உறுப்பினராக ஆனார் என்றும் பத்திரிகைகளிலே செய்தி படித்தோம். ஒரு வேளை தன்னுடைய கொள்கைகளை அந்தக்கட்சி பின்பற்றாத காரணத்தாலே – இந்தக் கட்சிதான் பின்பற்றும் என்ற நம்பிக்கையினுடைய அடிப்படையிலே சேர்ந்திருக்கக்கூடும்.

காமராசரைப் பற்றி புத்தகம் எழுதி இருந்தாலும் அந்தத் தலைவரைப் பின்பற்றும் அவரது கட்சி அன்பர்கள், அவர் மறைந்தபோது அவரைப்பற்றி அக்கறை காட்டாமல்–அவரைப் பற்றிய செய்திகளை விவரமாக வெளியிடாமல்–விட்டுவிட்டார்கள் என்பதையும் நான் மிகுந்த வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சாமி சிதம்பரனாரின் மாணவர்

தலைவரவர்கள் இலக்குவனார் பற்றிக் குறிப்பிடுகிறபோது அவர் மறைந்த பெரும்புலவர் சாமி சிதம்பரனாருடைய மாணவர் என்றும், அவருக்குரிய பண்புகள் அனைத்தையும் அவரும் பெற்றிருந்தார் என்றும் சொன்னார்கள். நண்பர் மா. செங்குட்டுவன் அவர்கள் பேசுகிறபோது இலக்குவனார் சாமி. சிதம்பரனாருடைய 'மறுபதிப்பு' என்று குறிப்பிட்டார்கள்.

சாமி. சிதம்பரனாரவர்கள் பெரியாருடைய விடுதலை நாளிதழிலே ஆசிரியராக விளங்கி சுயமரியாதைச் சுடரொளியாகத் திகழ்ந்தவராவார்கள்; இங்கு சாமி. சிதம்பரனாருடைய துணைவியார் திருமதி. சிவகாமி சிதம்பரனார் அவர்கள் வருகை புரிந்திருக்கிறார்கள். இந்த அம்மையாரை ச்சாமி சிதம்பரனார் கலப்புத் திருமணமாகவும், சீர்திருத்தத் திருமணமாகவும் செய்துகொண்டார். அதுமட்டுமன்று; சாமி சிதம்பரனாரும், இந்த அம்மையாரும், ஈரோட்டிலே தந்தை

பெரியாரவர்களுடைய இல்லத்திலே – அன்னை நாகம்மையார் இருந்த காலத்தில் – அவர்களுடைய 'செல்வ மக்களாக'ச் சில ஆண்டுகள் வாழ்ந்தவர்கள்.

அவ்வளவு *சீர்திருத்தக்* கொள்கையை உடைய,—பெரியாருடைய அன்பை முழுமையாகப் பெற்ற—சாமி சிதம்பரனாருடைய மாணவராகத் திகழ்ந்த இலக்குவனாரவர்கள் அவரைப் போலவே சீர்திருத்தக்காரராகவும் சுயமரியாதைக்காரராகவும், தமிழ்ப்பற்றாளராகவும் சுருக்மாகச் சொன்னால் செங்குட்டுவன் அவர்கள் குறிப்பிட்டது போல—, அவருடைய 'மறுபதிப்பாகவும்'— திகழ்ந்ததில் வியப்பில்லை.

இலக்குவனார் அவர்கள் மறைந்த நேரத்தில், பத்திரிகைகள் அவருடைய வாழ்க்கைக் குறிப்பை வெளியிட்டபோது அவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தாகச் செய்தி வெளியிட்டிருந்தார்கள். அது தவறு. அவருக்கு மூன்று மனைவிகள் இருந்தார்கள். முதல் மனைவி மன்னார்குடியிலே 'செகண்டரி கிரேடு' ஆசிரியையாக இருந்தவர்; சாமி சிதம்பரனார்தான் இந்தப் பெண்ணைத் தன்னுடைய மாணவரான இலக்குவனாருக்கு மணப்பெண்ணாகத் தேர்ந்தெடுத்துத் தன்னுடைய இல்லத்திலேயே தானே முன்னின்று திருமணத்தை நடத்தி வைத்தார். அந்த அம்மையார் இளமையிலேயே மறைந்து விட்டதால், பிறகு மறுமணம் செய்து கொண்டார். அவருக்குத் தன்னுடைய மாணவரிடத்திலே அவ்வளவு அன்பு இருந்தது. இங்கே வீற்றிருக்கின்ற சிவகாமி சிதம்பரனார் அவர்களும் அவருடைய திருமணத்திலே கலந்து கொண்டிருக்கக் கூடும். அவர்கள் இந்த இரங்கல் கூட்டத்திலே பங்கு கொள்வது அவருக்கும், நமக்கும் மிகுந்த வேதனை தரக்கூடிய புண்ணாகும்.

நல்ல ஆசிரியர்களுக்கு நல்ல மாணவர்கள் கிடைத்த காலம் அது.

இலக்குவனார் கல்விப் பட்டங்களிலேயே மிகப் பெரிய பட்டமாகிய டாக்டர் பட்டத்தைப் பெற்றார். மிகப்பெரிய பதவிகளான மாநிலக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் பதவியையும், உசுமாணியாப் பல்கலைக்கழகப் பேராசியர் பதிவியையும் ஏற்றுப் பணிபுரிந்தார்.

இலக்குவனாருக்குச் சிலை

இங்கே பேசிய நண்பர் '*சிலை*' பற்றிப் பேசினார்கள். நாங்கள் பணியாற்றுகின்ற மாநிலக் கல்லூரியிலே மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாகவே நாங்கள் பேராசிரியர் இலக்கு*வனார் அவர்களுடைய* திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தோம். அதை, அவர்கள் அங்கு வந்திருந்தபோது, மகிழ்வுடன் சிறிது நேரம் உற்றுப் பார்த்து விட்டு, நல்ல இடத்திலேதான் வைத்திருக்கிறீர்கள் என்று சொல்லி, எங்களையெல்லாம் வாழ்த்திச் சென்றார்.

எனக்கு முன்னாலே பேசிய, என்னுடன் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பேராசிரியர் எழில் முதல்வன் அவர்கள் பேராசிரியர் இலக்குவனாருக்குச் சிலை வைக்க வேண்டும் என்று சொன்னார். எங்கள் மாநிலக் கல்லூரியிலே வெள்ளையன் என்று ஒரு பேராசிரியர் இருந்தார். அவரும் இலக்குவனாரைப் போலவே சீர்திருத்தக்காரராகவும், சுயமரியாதைக்காரராவும் திகழ்ந்தார். அவர் அண்மையிலே மறைந்து போன செய்தியை இங்கே பலர் அறிந்திருக்கக் கூடும். அவர், நான் முன்னாலேயே குறிப்பிட்டபடி இலக்குவனார் அவர்களுடைய படத்தைத் திறந்த போதே மறைந்த பேராசிரியர் இலக்குவனாருடைய சிலையைத் திறக்க வேண்டும் என்ற கருத்தை முதன் முதலாகச் சொன்னார். அப்போது நாங்களெல்லாம் பேசி அதற்கான இடத்தையும் கூட முடிவு செய்தோம். நாங்கள் பணியாற்றுகின்ற மாநிலக் கல்லூரியின் ஒரு புறத்திலே, திராவிட கலாரத்ன தாட்சணாத்திய காலநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையருடைய சிலை இருப்பதை அறிவீர்கள். அதுபோலவே இலக்குவனாரவர்கள் பணியாற்றிய மாநிலக் கல்லூரியின் மறுபுறத்திலே அவருடைய சிலையை வைக்கலாம் என்று கருதினோம்.

பேராசிரியர் வெள்ளையன் அப்போதே, அதற்கான (சிலையைத் திறப்பதற்கான) வேலையை ஆரம்பிக்கலாமா (தமிழ்ப் பற்றார்களிடம் ஆதரவு திரட்டுதல்) என்றார். 'நான் கொஞ்சம் பொறுங்கள்' என்றேன். இப்போது அதற்கான நேரம் வந்துவிட்டது என்றே எண்ணுகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்—65-ல்—நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது—தன் இன்னுயிரை ஈந்த இராசேந்திரனின் சிலை அமைக்கப் பட்டிருக்கிறது. அது போன்ற மேற்படி போராட்டத்தில் பாதுகாப்புக் கைதியாகச் சிறையிலடைக்கப்பட்ட பேராசிரியர் இலக்குவனார் அவர்களின் சிலையைச் சென்னையில் மாநிலக் கல்லூரியிலே திறப்பது மிகப் பொருத்தமாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

தமிழக அரசு

நம்முடைய—எழுத்தாளர் சங்க — நண்பர்கள் சிலர் பேசும்போது அரசு இலக்குவனாருக்கு என்ன செய்து விட்டது என்றும், அவர் இறந்த பிறகு குடும்பத்துக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை என்றும். குறிப்பிட்டார்கள். எழுத்தாளச் சங்கப் பொதுச் செயலாளர் பேசும் போது, பேரறிஞர் அண்ணா காலத்தில் கலைஞர், நாவலர் பெருமுயற்சியில் தொல்காப்பிய ஆங்கில மொழிபெயர்ப்புக்கு ரூ 5,000 வழங்கப்பட்டதையும் அய்யா இலக்குவனார் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது செய்த உதவியையும், இன்னோரன்ன பிற நிலைகளையும் கூறினார். அய்யா அவர்களை

ஒரு நிலையில் நிறுத்த முடியாது என்றும், குறிப்பிட்டார். பேராசிரியர் இலக்குவனார் செப்டம்பர் திங்கள் 4–ஆம் நாள் இரவு 10 மணிக்கு மதுரை 'ஏர்சுரின் மருத்துவ விடுதியில்' காலமானார். அவர் மறைந்து இன்றும் சரியாக **இரண்டு மாதங்கள்** கூட ஆகவில்லை. சில மாதங்களாவது கடந்து, அதன் பிறகு அரசு அவர்கள் குடும்பத்தைக் கவனிக்கவில்லை என்று குற்றம் சொன்னால் அதிலே பொருளுமுண்டு; பொருத்தமுமுண்டு. இரண்டு மாதங்கள் கூட ஆகாத நிலையில் குறை பேசுவது சரியில்லை.

எனக்கிருக்கிற கவலையெல்லாம், எப்படியும் அய்யா அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்திற்கும் உதவவேண்டும் என்பதுதான். போட்டி மனப்பான்மை உருவாகாமல் நம்பிக்கையோடு அரசுக்கு நமது எண்ணத்தைத் தெரிவிப்போம். அரசினர் நிறைவேற்றுவார்கள் என்றும் நம்பிக்கை நமக்கெல்லாம் நிரம்ப உண்டு.

பேராசிரியர் டாக்டர் இலக்குவனார் அவர்களுடைய இரங்கற் கூட்டத்தில் கலந்துகொண்டு அவரைப் பற்றிய நல்ல எண்ணங்களை வெளிப்படுத்த வாய்ப்பளித்த எழுத்தாளர் சங்கத்தலைவர் பன்னீர்செல்வம் அவர்களுக்கும், எழுத்தாளர் சங்கப் பொதுசெயலாளர் கவிஞர் வா மு சேதுராமன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவருக்கும் எனது வணக்கம்.

○ * ○

Phone No. 71502

Please Contact:

M/s. Rathnam Enterprises

JAMMI BUILDINGS
Royapettah High Road
Madras-4

For errection of High Voltage and
Medium Voltage electrical equipments

Also Contaet: **For 'ON' line filtering of transformer Oil**

'தமிழ்ப்பணி' சந்தா விவரம்

ஆயுள் சந்தா 101 உருபா
பத்து ஆண்டுச் சந்தா 51 உருபா
ஐந்து ஆண்டுச் சந்தா 27 உருபா
ஆண்டுச் சந்தா 6 உருபா